# ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி

## நிர்வாக அறிக்கை

## நிதியாண்டு – 2017– 18

**1. ( அ) ஆட்சி நிலை**

இந்நகராட்சியின் பரப்பு 5.718 சதுர கிலோ மீட்டர் ஆகும். அறிக்கையாண்டில் இந்நகராட்சியின் எல்லையில் யாதொரு மாறுதலும் இல்லை.

இந்நகராட்சியானது 01.10.1884 முதல் நான்காம் நிலை நகராட்சியாகவும் 01.04.1947 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாகவும் இருந்தது. பின்னர் அரசினரின் 01.08.63 ம் தேதிய 768 எண்அரசாணையின்படி 01.11.63 முதல் இரண்டாவது நிலை நகராட்சியாகவும் அதன் பின்னர் அரசினரின் 29.03.84 ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் 498 ம் எண் அரசாணையின்படி 29–11–1984ல் முதல்நிலை நகராட்சியாகவும் இயஙகி வருகிறது.

1991 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி இந்நகரின் மக்கள் தொகை எண்ணிக்கை 68543 ஆக இருந்தது. 2001 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி இந்நகரின் மக்கள் தொகை 73183 ஆக உயர்ந்தது. மக்கள் தொகை கணக்கின்படி ஒவ்வொரு பத்தாண்டுகளிலும் மக்கள் தொகை கீழ்க்கண்டவாறு இருந்தது.

| | | |
|---|---|---|
| 1941 | – | 34642 |
| 1951 | – | 40487 |
| 1961 | – | 46816 |
| 1971 | – | 53859 |
| 1981 | – | 61458 |
| 1991 | – | 68543 |
| 2001 | – | 73183 |
| 2011 | – | 75373 |

இவர்களில் ஆண்கள் 37413 மற்றும் பெண்கள் 37960 ஆகும்.

இந்நகர் நில நேர்க் கோட்டில் 77.39 டிகிரியிலும், நிலக் குறுக்குக் கோட்டில் 9.3 டிகிரியிலும் கடல் மட்டத்திற்கு மேல் 137.822 மீட்டர் உயரத்திலும் உள்ளது.

அரசினரின் உள்ளாட்சித் துறையின் 21.11.62ம் தேதிய 207650/எம்–2 ம் எண் குறிப்பு கடித்தின் படியும் 04.08.1962 ம் தேதிய 768 ம் எண் அரசாணையின்படி நகராட்சியின் பரப்பளவு – 5.718 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

நகர்மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 33 ஆகும்.

## 1. ( ஆ ) நகரின் சிறப்பு

இந்நகரின் மைய பகுதியில் அருள்மிகு ஆண்டாள் திருக்கோவில் உள்ளது. மேற்படி கோவிலின் இராஜகோபுரம் தமிழ்நாட்டின் மிக உயரமானது. அக்கோபுரம் தமிழக அரசின் சின்னமாக பொறிக்கப்பட்டு சிறப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோவிலில் ஒவ்வொரு வருடமும் ஆடி மாதத்தில் ஆடிப்பூரம் திருவிழாவும் மார்கழி மாதத்தில் எண்ணெய்காப்பு நீராட்டு விழாவும் சிறப்புற நடை பெற்று வருகிறது. இதில் ஆடிப்பூர தேர்த்திருவிழாவின் போது வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக பொது சுகாதார வசதியும், குடிநீர் வசதியும் நகராட்சி நிர்வாகம் மிகச் சிறப்பாக செய்து வருகிறது. இத்திருவிழா நடைபெறும் நாள் மாவட்ட ஆட்சித் தலைவர்அவர்களால் உள்ளூர் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டு வருகிறது.

நகரின் தெற்கு ஓரத்தில் அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் உள்ளது. நகர் பேருந்து நிலையத்திற்கு வடக்கே அருள்மிகு பெரிய மாரியம்மன் கோவில் திருக்கோவில் உள்ளது. மேற்படி கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் 13 நாட்கள் திருவிழா நடைபெறும். இத் திருவிழாவின் போதும் பொது சுகாதார வசதியும், குடிநீர் வசதியும் இந்நகராட்சி நிர்வாகத்தின் நேரடி பார்வையில் நடைபெற்று வருகிறது. நகர் பேருந்து நிலையத்தின் அருகில் கிறிஸ்தவர்களின் சி.எஸ்.ஐ. ஆலயமும், பேருந்து நிலையத்தின் தெற்குப் பக்கம் முஸ்லீம் மக்களின் ஜூம்மா புதுப்பள்ளி வாசலும் உள்ளது.

## 2. மன்றம்

அரசின் 11.06.96 ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் ( தேர்தல் பிரிவு ) 135ம் எண் ஆணையின்படி இந்நகர் மன்றம் 33 வார்டுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அறிக்கை ஆண்டில் வார்டுகள் ஏற்கனவே உள்ள மொத்த எண்ணிக்கை 33 மாறாமல் வார்டு மறு வரையரை பணிகள் தமிழ்நாடு அழசிதழ் வெளியீடு நாள்; 11–07–2017 ன் படி மாநில மறு வரையரை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வார்டுகள் மறு வரையரை தொடர்பாக இறுதி உத்திரவுகள் அறிக்கை ஆண்டில் பெறப்படவில்லை.

நகர் மன்ற தேர்தல் நடைபெறாததால் அறிக்கை ஆண்டு முழுவதும் திரு T.M.முகம்மது முகைதீன் ஆணையாளர் அவர்கள் தனி அலுவலர் பொறுப்பினையும் கவனித்து வந்தார்கள்.

## இயங்கும் அலுவலர்கள்

அறிக்கையாண்டில் நகராட்சி ஆணையாளராக பணிபுரிந்து வந்தவர்கள், பிரிவுத் தலைமை அலுவலர்களிடமும், சிப்பந்திகளிடமும் அன்றாடம் நிர்ணயம் செய்யப்பட்ட பணிகளைப் பார்வையிட்டு அவ்வப்போது அவசியமானவற்றை நிறைவேற்றுவதற்கு தக்க நடவடிக்கை எடுத்து வந்தார்கள்.

## ஈ) கூட்டஙகள்

அறிக்கையாண்டில் நடைபெற்ற மன்றத்தின் மொத்த கூட்டஙகள் 4 ஆகும். இதில் சாதாரணக் கூட்டம் 1 , அவசரக் கூட்டம். – 3 நடைபெற்றது.

## உ ) மன்றத்தின் முடிவு செய்யாத பொருள்

2017–2018 ம் ஆண்டு இறுதி வரை மன்றத்தால் முடிவு செய்யப்படாமல் நிலுவையாக உள்ள பொருள் எதுவும் இல்லை. அறிக்கையாண்டில் பரிசீலனைக்கு வந்த பொருட்கள் அனைத்தும் தாமதமின்றி முடிக்கப்பட்டது. திரு T.M.முகம்மது முகைதீன் தனி அலுவலர் அவர்களால் 01–04–2017 முதல் 31–03–2018 வரை முடிவு செய்யப்பட்ட பொருட்கள் 103 எண்ணம் ஆகும்.

## ஊ) மேலாளுகை

அறிக்கையாண்டில் இந்நகராட்சியின் பொது நிர்வாகப் பிரிவு வேலைகள் மற்றும் வசூல் வேலைகளை கவனிப்பதற்கும் அனுமதிக்கப்பட்ட பணியிடஙகளின் விபரஙகள் பின் வருமாறு.

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | எண்ணம் |
|---|---|---|
| 1 | மேலாளர் | 1 |
| 2 | கணக்கர் | 1 |
| 3 | உதவியாளர் | 2 |
| 4 | இளநிலை உதவியாளர் | 12 ( காலி 2 ) |
| 5 | பதிவறை எழுத்தர் | 3 ( காலி 2 ) |
| 6 | வருவாய் ஆய்வாளர் | 2 |
| 7 | வருவாய் உதவியாளர் | 12 ( காலி 2 ) |
| 8 | தட்டச்சர் | 1 ( காலி 1) |
| 9 | ஜீப் ஓட்டுநர் | 1 |
| 10 | இரவுக் காவலர் | 1 |

அறிக்கை ஆண்டில் கருணை அடிப்படையில் ஒரு இளநிலை உதவியாளர் பணியிடமும் இரண்டு அலுவலக உதவியாளர் பணியிடஙகளும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்திரவின் அடிப்படையில் நிரப்பப்பட்டது.

## ( 3 ) இடவசதிகள்

நகராட்சி அலுவலகம், சொந்த அலுவலகக் கட்டிடத்திலேயே தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் போதிய வெளிச்சமும், காற்றோட்டமும் உள்ளது. கட்டிடம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 4) வழக்குகளும் தண்டச் செலவு களும்

மன்றத்தின் வழக்கறிஞராக திரு. . சௌந்திரராஜன் அவர்கள் கவனித்து வருகிறார். அறிக்கையாண்டில் நிரந்தர வழக்கறிஞர் கட்டணம் இதர வழக்கு செலவுகள் வகைக்கான ரூ.1,22,000 / செலவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1) | வருட ஆரம்பத்தில் இருந்த வழக்குகள் | 56 |
| 2) | நடப்பு ஆண்டில் தொடரப்பட்டது | 6 |
| 3) | மொத்தம் | 62 |
| 4) | நடப்பு ஆண்டில் முடிவு செய்யப்பட்டது | 4 |
| 5) | நிலுவையாக உள்ள வழக்குகள் | 58 |

நிலுவையாக உள்ள வழக்குகளை முடிவு செய்யத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**<u>அச்சடித்தல்</u>**

அலுவலத்திற்கு தேவையான படிவஙகளும், புத்தகஙகளும் சிவகாசி நகரிலுள்ள கூட்டுறவு அச்சகஙகள் மூலம் அச்சடித்து பெறப்பட்டது. மேலும் இதர சாதாரண படிவஙகளும் அவ்வப்போது ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அச்சடிக்கப்பட்டு வந்தது. அச்சடித்தல் செலவு மற்றும் எழுது பொருள் செலவு நிமித்தம் அறிக்கையாண்டில் மொத்தம் ரூ. 13,24,210/ செலவழிக்கப்பட்டது.

# போக்குவரத்து

## சிப்பந்திகள்

இந்நகராட்சிக்கு ( தரம் 2 ) நகராட்சிப் பொறியாளர் பதவி ஒன்று நிரந்தரமாக அனுமதிக்கப்பட்டது. திரு சு.ராமலிஙகம் அவர்கள் 1–4–2017 முதல் 31–3–2018 வரையும் நகராட்சிப் பொறியாளராகப் பணியாற்றி உள்ளனர். பொறியியல் பிரிவு தொடர்பான எல்லா வேலைகளையும் நகராட்சிப் பொறியாளர் மேற்பார்த்து வருகிறார். கட்டிடஙகள் கட்டும் வேலை, சாலைகளைச் சார்ந்த வேலைகளை இளம் பொறியாளர் ஒருவர் பார்த்து வருகிறார். தலைமை நீர் இறைப்பு நிலையம் தண்ணீர் விநியோக இதர வேலைகள் தனிப்பட்ட வீடுகளுக்கு தண்ணீர் விநியோக இணைப்புகள் வழஙகுவது போன்ற வேலைகளை தண்ணீர் விநியோக மேற்பார்வையாளர் கண்காணித்து வருகிறார். இவருக்கு உதவியாக தண்ணீர் விநியோக பராமரிப்பு பணியாளர்களினால் குடிநீர் பராமரிப்பு வேலைகள் செவ்வனே கண்காணிக்கப்பட்டு வருகிறது.

<u>சாலைகள், பாலஙகள், கட்டிடஙகள்</u>

**<u>அ ) சாலைகள்</u>**

அறிக்கையாண்டில் துவக்கத்தில் 56.825 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வந்தது.

அறிக்கையாண்டில் இறுதியில் மொத்த சாலைகள் கீழ்கண்டவா உள்ளன.

| | |
|---|---|
| 1) சிமிண்ட் சாலைகள் | 20.300 கிலோ மீட்டர் |
| 2 ) தார் தளவரிசை சாலைகள் | 6.567 கிலோ மீட்டர் |
| 3 ) சல்லி போடாத சாலைகள் | 1.958 கிலோ மீட்டர் |

இந்நகராட்சிக்கு சொந்தமான கற்பாறை கிடஙகு ஏதும் கிடையாது.

இந்நகராட்சி எல்லைக்கள் 12.40 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிப்பில் உள்ள சாலைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**திட்ட பணிகள் 2017–18**

2017–18 ம் ஆண்டில் பின்வரும் விவரப்படி திட்டப்பணிகள் இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பணிகள் எண்ணிக்கை | முடிவு பெற்றது | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) | செலவு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2017–18 (TURIP ) | 1 | –– | 400.00 | 110.27 |
| 2 | சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–18 | 13 | 13 | 18.74 | 18.74 |

**குடிநீர் விநியோக மேம்பாட்டுத் திட்டம்**

இந்நகராட்சிக்குக் குடிநீர் திட்டம் 1955 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்நகராட்சியின் தண்ணீர் தலைமையிடமானது நகரிலிருந்து மேற்கே சுமார் 11 கிலோ மீட்டர் தொலைவில் செண்பகத் தோப்பு மலையடிவாரத்தில் பேயனாற்றுப் படுகை என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

**தண்ணீர் தலைமையிடத்தில் அமைந்துள்ள நீர் ஆதாரஙகள் விபரம்.**

1) 75 மீட்டர் நீளமுள்ள நீர் வடிப்பான் — 1 எண்ணம்.
2) நீர் உறிஞ்சு கிணறுகள் — 5 எண்ணம்
3) நீர் உறிஞ்சும் கிணற்றுடன் இணைந்த சேகரிப்பு கிணறு — 1 எண்ணம்
4) திறந்த வெளி கிணறு — 1 எண்ணம்
5) 10 அஙகுல விட்டமுள்ள ஆழ்துளை கிணறு — 2 எண்ணம்
6) 6 அஙகுல விட்டமுள்ள ஆழ்துளை கிணறு — 13 எண்ணம்
7) 8 அஙகுல விட்டமுள்ள ஆழ்துறை கிணறு — 7எண்ணம்

மேலும் ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் பகுதிக்கு தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் தாமிரபரணி ஆற்றில் முக்கூடல் என்ற இடத்தில் 4.50 அ.விட்டமுள்ள 12எண்ணம் நீர் உறிஞ்சு கிணறுகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் தண்ணீர் பெறப்பட்டு அதில் இருந்து காசிநாதபுரம், கலிஙகப்பட்டி மற்றும் சேந்தமஙகலம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள pumping station மூலம் pumping செய்யப்பட்டு அதன் பின்பு கூடலூர் வந்தடைந்து

அதிலிருந்து Gravity main மூலம் நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள 4,00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட தரைமட்ட நீர்தேக்கத் தொட்டியை வந்தடைந்து அதில் இருந்து pumping main மூலம் நகர் பகுதியில் நான்கு இடஙகளில் நிறுவப்பட்டுள்ள நகராட்சி அலுவலக மேல்நிலை நீர்தேக்க தொட்டி (7.00லட்சம்) ஊரணிப்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (4.00 லட்சம்) பெருமாள்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (5.00 லட்சம்) மற்றும் மஜித் நகர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (4.00 லட்சம்) ஆகிய மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் தண்ணீர் ஏற்றப்பட்டு நகர் பகுதிகளில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டம் 2012–2013 ம் ஆண்டு 29.49 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மழை காலஙகளில் பேயனாற்றுப் படுகையில் தொடர்ந்து நீரோட்டம் இருக்கும் சமயத்தில் 75 மீட்டர் நீளமுள்ள நீர் வடிப்பான் இயஙகுகிறது. மற்ற காலஙகளில் தலைமையிடத்தில் உள்ள நீர் உறிஞ்சும் கிணறுகள், திறந்த வெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளிலிருந்த மின்விசை பம்புகள் மூலம் நீர் இறைக்கப்பட்டு சேகரிப்பு கிணற்றுக்கு கொண்டு வரப்படுகிறது.

<u>குழாய் கிணறுகள்</u>

தண்ணீர் தலைமையிடத்தில் சேகரிப்பு கிணற்றில் சேகரிக்கப்படும் குடிநீரை 16 அஙகுல விட்டமுள்ள சி.ஐ. தானியஙகி குழாய் மூலம் 6.9 கிலோ மீட்டர் நீளத்தில் நகருக்கு வெளிப் பகுதியில் அமைந்துள்ள கோட்டைப்பட்டி பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட இடத்தில் அமைந்துள்ள தண்ணீர் தேக்க மையத்திற்கு கொண்டு வரப்படுகிறது. தண்ணீர் தேக்க மையத்திலிருந்து நகருக்குட்பட்ட பகுதிகளில் 56.4 கிலோ மீட்டர் நீளமுள்ள குடிநீர் விநியோக பகிர்மானக் குழாய்கள் மூலம் நகரின் அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

<u>தண்ணீர் தேக்க மையம்</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் குடிநீர் விநியோகத்திற்கென 12.25 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி ஒன்றும் 10.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஒன்றும் நகருக்கு வெளியே கோட்டைப்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டு இவற்றிலிருந்து நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

<u>குடிநீர் விநியோகம்</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் பகுதிகளை மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. சாதாரண காலஙகளில் 63.00 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகமும், கோடை காலஙகளில் 58.00 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகமும் செய்யப்பட்டு வரப்படுகிறது. இது தனி மனிதனின் தேவைக்கு முறையே 90 லிட்டர் மற்றும் 77 லிட்டர் வீதம் கிடைத்து வருகிறது. தாமிரபரணி ஆற்று நீர் மற்றும் பேயனாற்று படுகை ஆற்று நீர் இரண்டும் நகரின் குடி நீர் விநியோகத்திற்கு பயண்படுத்தப்பட்டு வருகிறது. நகரில் மொத்தம் 12972 குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. 220 எண்ணம் பொதுக் குடிநீர்க் குழாய்கள் நகரில் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளது.

**குடிநீரல்லாத இதர உபயோகம்**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் உபயோகமல்லாத பிற உபயோகஙகளுக்காக 182 அடி பம்புகளும், 206 விசை பம்புகளும் அமைக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இவைகளிலிருந்து தினசரி சராசரியாக 10.30 லட்சம் லிட்டர் தண்ணீர் கிடைத்து வருகிறது.

**குடிநீர் வாகனம்**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் பகுதியில் அவசரமான அத்தியாவசிய தேவை உபயோகம், திருமண மற்றும் இதர பொது உபயோகம் மற்றும் நகருக்குட்பட்ட சத்துணவு மையஙகள் ஆகிய இடஙகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள குடிநீர் வாகனஙகள் உள்ளன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| மினி லாரி | 6000 லிட்டர் கொள்ளளவு | 1 எண்ணம் |

## சாலை வழிச் செல்வோர் தஙகும் விடுதி

அறிக்கையாண்டில் புதியதாக விடுதிகள் எதுவும் திறக்கப்படவில்லை. ஏற்கனவே நடத்தப்பட்டு வரும் விடுதி பழுது பார்த்து மேம்பாடு செய்யப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

## நகராட்சி சத்திரம்

இந்நகராட்சியின் கீழ் சத்திரம் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

## பொறிகளும் , கருவிகளும்

நகர்மன்ற தண்ணீர் தலைமை நிலையம் நகரிலிருந்து 11 கி.மீ. தொலைவில் மேற்கே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் காட்டுக்குள் உள்ளது. மேற்கே தண்ணீர் தலைமை நிலையம் சென்று வருவதற்கும் பிற அலுவலக வெளி வேலைக்குமாக ஒரு ஜீப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**தண்ணீர் விநியோகம்**

இந்நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் இந்நகரின் மேற்கு எல்லையிலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் உள்ள செண்பகத் தோப்பின் அருகில் பேயனாறு என்ற ஓடையில் உறிஞ்சு கிணறுகள், திறந்த வெளிக் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு அவைகளிலிருந்து பெறப் படும் தண்ணீர் நகரின் தேக்கக் தொட்டிக்கு பெறப்பட்டு நகர்ப் பகுதிக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் 18.50 லட்சம் செலவில் 1955ல் இருந்து தண்ணீர் விநியோகம் செய்யத் தீர்மானிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு

இந்நகரில் தீயணைப்பு பிரிவு நிலையம் ஒன்று 12–09–1978ம் தேதி முதல் ஏற்படுத்தப்பட்டு தற்போது இந்நகர் மதுரை ரோடு சாலையில் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இந்த தீயணைப்பு நிலையம் இந்நகர் மக்களுக்கு பெரிதும் பயன்படுகிறது வருகிறது.

1949ம் வருடத்திய தமிழ்நாடு இனாம் ஒழிப்பு 31வது பிரிவில் குளஙகள், ஆறுகள் பாசன திட்டஙகள் முதலியவைகள் அரசினருக்குரியது என்று இருப்பதால் தெய்வேந்திரி கிராமதிலுள்ள சர்வே எண். 120 பேயனாற்றில் மண் பாகத்தை அரசு புறம் போக்காக நிர்ணயித்து ஆணையிடும்படி மாவட்ட ஆட்சியர் அவர்கள் மூலமாக இவ்வலுவலகத்திய 28–01–77ம் தேதிய இ1/237/77 எண் கடிதத்தில் அரசுக்கு அனுப்பப் பட்டது.

இத்தீர்ப்பினை தலைமை நீரேற்று நிலையம் உள்ள இடம் அமைந்த பேயனாறு ஆற்றுப் படுகையில் தற்சமயம் அருள்மிகு நாச்சியார் தேவஸ்தானத்திற்கு பாத்தியம் என பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆற்றுப் படுகையில் தேவையான நிலத்தை கையகப்படுத்திக் கொள்ளவில்லை என்று கூறி இழப்பிட்டுத் தொகைக்காக அருள்மிகு நாச்சியார் தேவஸ்தானம் இந்நகராட்சிக்கு எதிராக இந்நகர் சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ். எண். 142/87 வழக்குத் தொடரப்பட்டதில் மேற்படி வழக்கில் தேவஸ்தானத்திற்கு சாதமாக தீர்ப்பு வழஙகப்பட்டது.

இத்தீர்ப்பினை எதிர்த்து இந்நகராட்சி மதுரையிலுள்ள இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் முறையீடு வழக்குத்தொடர்ந்து மேற்படி ஓ.எஸ்.161/87 எண் முறையீடு இந்நகராட்சிக்கு சாதமாக தீர்ப்பு வழஙகப்பட்டு தீர்ப்பின் நகல் வரப் பெற்றுள்ளது.

இந்நகர் தண்ணீர் விநியோகத் திட்டத்தின் கீழ் இந்நகர் பகுதியில்220 எண்ணம் பொதுக் குழாய்கள் உள்ளது. அறிக்கையாண்டில் பொதுக் குழாய்கள் புதியதாக அமைக்கப்படவில்லை. இந்நகரில் குடிநீர் விநியோகத் திட்டத்தின் கீழ் 77 கிலோ மீட்டருக்கு பிரதான குழாய்கள் அமைக்கப்பட்டு தேவையான சுலீஸ் வால்வு மற்றும் ஹைறடிரான்ஸ் அமைப்பப்பட்டுள்ளது.

இந்நகராட்சி தண்ணீர் விநியோகத் திட்டத்தை பராமரிப்பு மற்றும் ஊதியம் இதர பணிகளுக்காக 2016–2017ம் ஆண்டில் ரூ.3986688/– செலவழிக்கப் பட்டது. 2016–2017ம் ஆண்டுக்கு குழாய் கட்டணம் மற்றும் இதர வருமானஙகள் மூலம் இந்நகராட்சிக்கு ரூ. 84,32,427/– வரவு வந்துள்ளது. அறிக்கையாண்டில் தினசரி பொது மக்களுக்கு 68 லட்சம் தண்ணீர் விநியோகிக்கப்பட்டது. தண்ணீர் விநியோகக் குழாய்கள் இணைப்புக்கான நிர்ணயம் செய்யப்பட்ட உபவிதிகள் அமுல் செய்யப்பட்டு வருகின்றன. உபவிதியில் எந்த விதமான இடர்பாடுகளும் இல்லை.

01–07–2011 முதல் ஒரு குழாய் இணைப்பிற்கு ஒரு மாதத்திற்கு குறைந்தபட்ச கட்டணமாக ரூ. 50/– வீதம் நிர்ணயிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகின்றது. தண்ணீர்விநியோக தலைப்பில் வரவிற்கு மேல் அதிகமான செலவு ஏற்பட்டு வருகின்றது.

31–03–2018 அன்று வீடுகளுக்கு வழஙகப்பட்டிருந்த தண்ணீர் விநியோக தொகுப்புகள் 13126 ஆகும்.

ஏற்கனவே உள்ள பிரதான குழாய் மற்றும் தண்ணீர் தலைமையிடப் பகுதியில் ஏற்படும் மோட்டார் பழுதுகள் உடனுக்குடன் சரிசெய்து இயக்கப்பட்டு வருகின்றது.

தண்ணீர் விநியோகத்தை எல்லா பகுதி மக்களுக்கும் தண்ணீர் கிடைக்க வழி செய்யும் நோக்கத்துடன் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>தண்ணீர் விநியோக இதர வழிகள்</u>

இந்நகர் பகுதியில் குடிநீர் இல்லாத உபயோகத்திற்காக 23 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் நகரில் எல்லாப் பகுதியிலும் போடப்பட்டது. பொதுமக்கள் ஆழ்துளை கிணறுகளை அதிகஅளவில் பயன்படுத்தி வருகின்றனர். இதில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் வருடாந்திர பராமரிப்பு முறையில் பழுதுகள் நீக்கப்பட்டு குடிநீர் விநியோகம் சீராக கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆழ்துளை கிணறுகளுக்கு தேவையான உதிரி சாமான்கள் டான்சி சேல்ஸ் சென்டர் மூலம் பெறப்பட்டு வருகின்றது. இந்நகராட்சியில் 80 கிணறுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பல கிணறுகள் தனியார் துறைக்கு சொந்தமானதாகவும் உள்ளன.

<u>ஜெனரேட்டர்கள்</u>

1989ம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 3 ஜெனரேட்டர்கள் முறையே 15 கே.வி. மற்றும் 30 கே.வி. ஆகியவை மானியம் ரூ. 3.40 லட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டு அவை தண்ணீர் தலைமையிட ஆழ்துளை கிணறு எண்.2ன் அருகில் 20 கே.வி. ஜெனரேட்டரும், கிணறு எண் 4ன் அருகில் 15 கே.வி ஜெனரேட்டரும் கிணறு எண். 5ன் அருகில் 30 கே.வி. ஜெனரேட்டரும் அமைக்கப்பட்டுள்ளது..

<u>சாக்கடை</u>

இந்நகரில் பாதாளச்சாக்கடை இல்லை. பாதாளச்சாக்கடை திட்டம் செயல் படுத்த ஆய்வுப்பணிகள் மேற்கொள்ள மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஆய்வுப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

<u>சந்தைகளும், விழாக்களும்</u>

அறிக்கையாண்டில் நகராட்சியிலோ, தனிப்பட்டவர்களால் சந்தைகள் எதுவும் நடத்தப்படவில்லை. இந்நகரில் அருள்மிகு நாச்சியார் ( ஆண்டாள் ) திருக்கோவில் மூலம் நடத்தப்படும் கீழே கண்ட இரண்டு திருவிழாக்கள் முக்கியமான தாகும்.

1) ஆடிப்பூரத் திருவிழா

2 ) மார்கழி எண்ணைக் காப்புத் திருவிழா.

இத்திருவிழாக் காலஙகளில் வெளியூரிலிருந்து சுமார் 2 லட்சம் பேர் கலந்து கொள்கிறார்கள். மேற்கண்ட திருவிழா காலஙகளில் சுகாதார வேலைகள் தண்ணீர் விநியோகம் முதலியவை செம்மையாக செய்யப்பட்டு வருகின்றன. இந்த சுகாதார வேலைகளைக் கவனிக்க கமிட்டி எதுவும் நியமிக்கப்படவில்லை. ஆணையாளர், நகர்நல அலுவலர் ஆகியோர் மேற்பார்வையில் சுகாதார வேலைகள் செய்யப்பட்டு வந்தன. மேற்கண்ட திருவிழாக்களுக்கு ஏற்பட்ட செலவு விவரஙகள் பின் வருமாறு.

1) ஆடிப்பூரம் திருவிழா செலவு ரூ. 19075/–

2 ) மார்கழி எண்ணைக்காப்பு திருவிழா செலவு இல்லை.

.

**விளக்கு வசதிகள்**

இந்நகராட்சிக்கு வழக்கம் போல் தேவையான மின்வசதியை தமிழ்நாடு மின்வாரியத்திலிருந்து பெறப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் 1832 எண்ணம் 40 வாட்ஸ் குழல் விளக்குகள். 82 எண்ணம் சோடியம் ஆவி விளக்குகள், ஹைமாஸ்ட் விளக்கு 400 வாட்ஸ் 36 எண்ணம், 36 வாட்ஸ் சிஎப்.எல் விளக்குகள் 286 எண்ணம், 72 வாட்ஸ் சிஎப்.எல் விளக்குகள் 30 எண்ணம், 150 வாட்ஸ் மெட்டல் ஹாலேடு விளக்குகள் 101 எண்ணம் 144 வாட்ஸ் சிஎப்.எல் விளக்குகள் 200 எண்ணம் மினி மாஸ்ட் விளக்குகள் 90 வாட்ஸ் 25 எண்ணம் ஆக மொத்தம் 2592 விளக்குகள் இருந்தது. தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மன்றத்தின் 31–12–2013ம் தேதிய 1176ம் எண் தீர்மானப்படி 05–02–2014 முதல் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தெரு விளக்குகளுக்காக மின் கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவுகள் சேர்த்து மொத்தம் ரூ.92.33/–லட்சம் அறிக்கை ஆண்டில் செலவு செய்யப்பட்டுள்ளது.

# கல்வி

**பள்ளிகள்**

ஒரு உயர்நிலைப்பள்ளி, 5 நடுநிலைப்பள்ளிகள், 3 துவக்கப்பள்ளிகள் நகராட்சி நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்தன. அரசு உத்தரவின்படி நகராட்சி பள்ளிகள் அனைத்தும் 01.04.1990 முதல் கல்வித்துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு அரசினரால் ஏற்று நடத்தப்பட்டு வருகிறது.

**பள்ளி சத்துணவு திட்டம்**

தமிழகஅரசின் புதிய சத்துணவு திட்டத்தின்படி 5 வயது முதல் 9வயதுள்ள குழந்தைகளுக்கு ஒரு வேளை சத்துணவு வழங்க அரசு 28.5.82ம் தேதிய பொது துறையின் 557ம் எண் ஆணையின்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 10 வயது முதல் 15 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு தமிழ்நாடு அரசு 20.7.84ம் தேதிய 1222ம் எண் அரசாணைப்படி 15.8.1994 முதல் பள்ளி வேலை நாட்கள் மட்டுமே சத்துணவு வழங்க அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. திட்டத்தின்படி 9 நகர்மன்ற பள்ளிகளில் 5 வயது முதல் 9 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் 10 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் ஆக மொத்தம் 613 குழந்தைகளுக்கு ஒரு வேளை மதிய சத்துணவுடன் சேர்த்து முட்டை ஒன்று தினந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சத்துணவு திட்டத்தின்படி அரசினரால் அனுமதிக்கப்பட்ட சில விடுமுறை நாட்கள் தவிர இதர நாட்களில் பள்ளிகளில் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளிகளுக்கும் தனித்தனியே சத்துணவு திட்டம் பராமரிக்கப்பட்டு வருகிறது. சத்துணவு திட்டத்திற்கு குழந்தை 1க்கு 1 முதல் 5 வகுப்பு ரூ. 1.30/– மற்றும் ரூ1.70/–, 6 முதல் 8 வகுப்பு, 9 முதல் 10 வகுப்பு ரூ. 1.40/– மற்றும் ரூ1.80/–
வீதம் அரசு மான்யம் வழங்கப்பட்டு காய்கறி, மசால் மற்றும் விறகு ஆகியவைகளுக்கு செலவும் செய்யப்பட்டது.

இத்திட்டத்திற்கு தேவையான அரிசி, பருப்பு, பாமாயில் போன்றவைகள் அரசினரால் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பள்ளிகளில் சத்துணவு மையங்களை அதற்கென நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்கள் மேற்பாவையிலேயே நடத்தப்பட்டுவருகிறது. இத்துடன் ஒரு சமையலர் மற்றும் ஒரு உதவி சமையலரும் பணிபுரிந்து வருகின்றனர். அரசினரின் 16.09.04ம்தேதிய சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையினரின் 95 எண் அரசு உத்தரவின்படி கடந்த 25.06.04 முதல் சத்துணவு அருந்தும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு வாரம் 5 முட்டைகள் வழஙகும் திட்டம் தொடஙகப்பட்டுள்ளது.

<u>ஓய்வூதியம் பெறும் முதியோர்கள் சத்துணவுத் திட்டம்</u>

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 13.01.1983ம் நாளிட்ட எம்4/227463/82 எண் நிகழ்ச்சியாணையின் உத்திரவுப்படி 15.01.1983 முதல் ஏற்கனவே ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்கும் சத்துணவு குழந்தைகள் நல மையஙகள் மூலம் வழஙகப்பட்டு வருகிறது.

<u>பதிவான எண்ணிக்கையும் திறமையும்</u>

நகர்மன்றத்தால் பாரமரிக்கப்பட்டு வந்த இளநிலைப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகள் அனைத்தும் அரசினால் 09.03.90ம் தேதிய 347எண் கல்வித் துறையின் ஆணையின்படி 01.04.1990 முதல் கல்வித்துறை நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது.

<u>துவக்கக் கல்வி</u>

இந்நகராட்சியில் கல்வி வரியானது 1920ம் வருட தமிழ்நாடு ஆரம்ப கல்விச்சட்டத்தின்படி சொத்துகளில் ஆண்டு ஒன்றுக்கு5சதவிதம் உச்சவரம்பாக கல்வி வரி விதிக்கப்பட்டு வருகிறது. அதன்படி அறிக்கையாண்டில் கல்வி வரி விதிக்கப்பட்டு வருகிறது. அதன்படி அறிக்கையாண்டில் கல்வி வரி மூலம் கிடைக்க நிகர வரவு ரூ.3603974/– ஆகும்.

<u>அரசின் மானியஙகள் வரவு</u>

| | | |
|---|---|---|
| 1) ஆரம்பக் கல்வி பராமரிப்பு செலவுத் தொகை | – | இல்லை |
| 2) பற்றாக்குறை மானியம் | – | இல்லை |
| 3) பிணைத் தொகை மீதானவட்டி வரவு | – | இல்லை |
| மொத்தம் | – | இல்லை |

---

<u>தடுப்பு மருந்துகள்</u>

15 மருத்துவ உதவி

இந்நகராட்சியின் கீழ் மருத்துவ நிலையம் எதுவும் பராமரிக்கப்படவில்லை. அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகரில் அரசினரின் மேற்பார்வையின் கீழ் ஒரு நடுத்தர மருத்துவ நிலையம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த அரசு மருத்துவ நிலையம் இந்நகர் வாழ் மக்கள் மற்றும் இந்நகரைச்சுற்றியுள்ள கிராமஙகளில் குடியிருப்பவர்கள் ஆகியோரது வைத்திய சேவையை பூர்த்தி செய்ய

உதவுகிறது . தொற்று நோய்க்கு என அரசினர் மருத்துவ நிலையத்திற்குள் ஒரு தொற்று நோய் விடுதி கட்டப்பட்டு உள்ளது. இம்மருத்துவமனையில் பல்நோய் பிரிவும் ஏற்படுத்தப்பட்டு பல்நோய் மருத்துவரும் பணியாற்றி வருகின்றார்கள். இது நீங்கலாக 25.08.1973 முதல் சித்த வைத்தியம் ஆரம்பிக்கப்பட்டு அதற்கென ஒரு மருத்துவ அதிகாரியும் பணியாற்றி வருகின்றார்கள்.

அரசினர் மருத்துவமனை நீங்கலாக பல தனியார் மருத்துவமனைகள் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களால் நடத்தப்பட்டு வருகின்றனர். அரசினர் மருத்துவமனையில் ஆண் மருத்துவர்கள் பெண் குழந்தைகள் சிகிச்சைக்காக பெண் மருத்துவரும் அமர்த்தப்பட்டு செயல்படுகின்றார்கள்.

இந்நகராட்சியில் மருத்துவமனைகள் ஏதுவும் பராமரிக்கப்படவில்லை

**16 அமைப்பும் சிப்பந்தியும்**

அறிக்கையாண்டில் நகர் நல அலுவலராக டாக்டர் மா.சரோஜா எம்.பி.பி.எஸ். அவர்கள் 01–04–2017 முதல் 31.03.2018 வரை பணி புரிந்து வந்தார்கள்.

**பொது சுகாதாரத் துறையில் பணியாற்றும் சிப்பந்திகள் விபரம் வருமாறு**

இந்நகராட்சியின் பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டும் குறியீட்டின்படியும் கூடுதலாக ஒரு துப்புரவுப் பணி மேற்பார்வையாளர் பணியிடமும் 30 துப்புரவு பணியாளர்கள் பணியிடமும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின்04.05.98 ம் தேதிய ந.க.1193/98 ஜே3 எண் செயல்முறையாணையில் அனுமதிக்கப்பட்டு 16.09.98 முதல் பூர்த்தி செய்யப்பட்டு பணியாற்றி வருகின்றார்கள்.

| | | |
|---|---|---|
| 1) துப்புரவு ஆய்வர்கள் | – | 4 |
| 2) மகப்பேறு உதவியாளினிகள் | – | 3 ( காலியிடம் 1) |
| 3) மகப்பேறு ஆயாக்கள் | – | 3 ( காலியிடம் 2) |
| 4) துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | – | 5 |
| 5) ஓட்டுநர் | – | 6 |
| 6) கள உதவியாளர் | – | 1 |
| 7 ) துப்புரவுப் பணியாளர்கள் | | |
| அனுமதிக்கப்பட்ட பணியாளர் மொத்தம் | – | 163 |
| தற்சமயம் பணியில் உள்ள பணியாளர்கள் | – | 114 |
| காலிப் பணியிடம் | – | 49 |
| தனியார் மயம் | – | 32 |
| நிகர காலி பணியிடம் | – | 17 |

**அச்ச அருவருக்கத்தக்க தொழில் உரிமக்கட்டணம்**

இந்நகராட்சியில் 2017–18ம்ஆண்டிற்கான அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க தொழில்உரிமக்கட்டணம் ரூ 1085481/- வசூல் செய்யப்பட்டுள்ளது.

## நலமுறை விளம்பரம்

இந்நகராட்சி சுகாதார நல வழி முறைகளைப் பற்றிய பிரச்சார பணிகளை சுகாதார இலாக்காவில் பணியாற்றும் சுகாதார அதிகாரியின் மேற்ப11ார்வையின் கீழ் துப்புரவு ஆய்வாளர்கள், மகப்பேறு உதவியாளினிகள் ஆகியோர் செய்து வருகின்றார்கள். காலரா, பெரியம்மை, மலேரியா, குத்திருமல், டெங்கு காய்ச்சல் தடுப்பு, சத்துள்ள உணவு சுத்தமாக இருத்தல் மருத்துவ சிசு பரிபாலன வேலைகள் ஆகியவற்றை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வந்தார்கள்.

## பிறப்பு விகிதமும், மகப்பேறு உதவியும்

2011 ம் வருட கணக்கெடுப்பின்படி இந்நகர் மக்களின் எண்ணிக்கை 75373 ஆகும். அறிக்கையாண்டில் பதிவான பிறப்பு 2264. சென்ற ஆண்டு 2014–15 அறிக்கையாண்டில் பிறப்பு 1000 க்கு 17.2 சதவிகிதம் ஆகும். சென்ற ஆண்டு பிறப்பு 1000க்கு 17.2 சதவிகிதம் ஆகும்.

அறிக்கையாண்டில் பதிவு செய்யப்படாத பிறப்புகள் கண்டு பிடிக்கப்பட்டது 18 ஆகும். பதிவு செய்யப்படாத பிறப்புகள் தமிழ்நாடு அரசின் 1969 ம் வருடத்திய தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு வேலைகளை 4 துப்புரவு ஆய்வாளர்கள் பார்த்து வருகின்றார்கள். இந்நகராட்சியில் இரண்டு மகப்பேறு உதவியாளினிகளும் இவர்களுக்கு உதவியாக ஒரு மகப்பேறு ஆயாவும் தொடர்ந்து செயலாற்றி வருகின்றார்கள். பதிவான குழந்தைகளின் இறப்பு விகிதம் 1.2 சதவிகிதம் ஆகும். சென்ற ஆண்டில் இறப்பு விகிதம் 7.5 சதவிகிதம் ஆகும்.

பிறப்பு இறப்பு பதிவு பற்றிய அவர்களது பிரச்சார வேலைகள் துப்புரவு ஆய்வாளர்கள் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் பணியாற்றும் 2 மகப்பேறு உதவியாளினிகள் மற்றும் 1 ஆயா, இந்நகராட்சி மகப்பேறு இல்லத்திலேயே முறைப்படி பணியாற்றி வருகின்றார்கள். மகப்பேறு உதவியாளினிகளை வேலையை சுகாதார அதிகாரி அவர்களும் ஆணையாளர் அவர்களும் மேற்பார்வை செய்து வருகிறார்கள்.

## இறப்பு வீதம்

அறிக்கையாண்டில் பதிவான இறப்புகள் 712 ஆகும்.சென்ற ஆண்டில் பதிவான இறப்புகள் 688 ஆகும். பதிவு செய்யப்படாத இறப்புகள் 26 கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு முந்தைய ஆண்டில் 29 கண்டு பிடிக்கப்பட்டது. இம்மாதிரி உரிய காலத்தில் அறிக்கையாண்டில் இறப்பு சதவிகிதம் 9.8 சதவிகிதம் ஆகும். சென்ற ஆண்டின் இறப்பு சதவிகிதம் 7.50 ஆகும்.

## கொசு ஒழிப்பு

இந்நகரில் மலேரியா வியாதியினால் பாதிக்கப்பட்ட நபர் இல்லை. இருந்தாலும் கொசுக்கள் ஒழிக்கும் தீவிரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகர்மன்ற அனுமதி பெற்று அபேட் மருந்து வாஙகப்பட்டு களப்பணியாளர்கள் மூலமாக நகரில் உள்ள அனைத்து

வீடுகளில் உள்ள குடிநீர் தொட்டிகள், தண்ணீர் தேக்கி வைக்கும் பாத்திரஙகள், ஆகியவற்றில் அபேட் களசல் கலக்கப்பட்டு கொசுப்புழு உற்பத்தியாவது தடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் அனுமதி பெற்று மருத்துவ கழகத்தால் அஙகீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பைரித்திரியம் 2 சதவிகிதம் மருந்து நகர்மன்ற நகராட்சி புகை தெளிப்பான் மூலம் புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது.

<u>பாதுகாப்பு ( துப்புரவு )</u>

இந்நகராட்சியில் 4 துப்புரவு ஆய்வாளர்கள் மேற்பார்வையில் 5 துப்புரவு மேற்பார்வையாளரின் நேரடி பார்வையில் 118+32 துப்புரவு பணியாளர்கள் துப்புரவு வேலைகளை செய்து வருகின்றார்கள். நகரிலுள்ள எல்லா பொது மல அறைகளும் சிறந்த முறையில் சீர்திருத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் ஆரம்பத்தில் நகரில் மொத்தம் 59 இடஙகளில் 440 மல அறைகள் உள்ளது. நகரின் எல்லா தெருவிலுள்ள குப்பைகளும், எல்லா துப்புரவு சிப்பந்திகளாலும் எடுக்கப்பட்டு நகரின் பல பாகஙகளில் சேர்க்கப்பட்டு பின்னர் டிராக்டர், லாரி மூலம் கலப்பு உரம் சேகரிக்கப்படும் இடத்திற்கு கொண்டு சென்று கொட்டப்படுகிறது. நாள்தோறும் 27.7 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு உரக்கிடஙகிற்கு கொண்டு செல்லப்படுகிறது. மல அறைகள் அனைத்தும் பிளஸ்அவுட் முறையில் மாற்றப்பட்டதால் மலக்கழிவுகள் சேகரிக்கப்படவில்லை. அரசு உத்திரவில் உள்ளபடி அறிக்கையாண்டில் சீருடை வழஙகப்பட்டது. எல்லா தெருக்களிலும் திறந்த வெளி வாறுகால்கள் கட்டப்பட்டுள்ளது. நகரின் பல பகுதிகளில் உள்ள பெரிய வாறுகால்கள் நகரின் வெளிப் பக்கத்தில் உள்ள பெரிய ஓடையில் இணைக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்டவாறு வாகனஙகளும், வண்டிகளும் அறிக்கையாண்டில் துப்புரவு பணிக்காக பயன்படுத்தப்பட்டன.

| | |
|---|---|
| 1) டிராக்டர் ( டிரைலருடன் ) | – 1 |
| 2) மினிலாரி | – 2 |
| 3) காம்பாக்டர் | – 1 |
| 4) கழிவு நீர் அகற்றும் லாரி | – 1 (பழுதுப்பட்டது) |
| 5) டம்பர் பிளேசர் லாரி | – 2 |
| 6) ஜே.சி.பி. | – 1 |
| 7)ஆட்டோ | – 1 |

அறிக்கையாண்டில் சொத்துகளின் மேல் விதிக்கப்படும் சொத்து வரியில் ஒரு பகுதியாக விதிக்கப்படும் துப்புரவு ( Scavenging ) வரி அமுலில் இருந்து வருகிறது. வரவுக்கு மேல் கூடுதலாக செலவு தொகையை மன்றத்தின் பொது நிதியிலிருந்து ஈடு செய்து வரவு செலவு அளிக்கப்பட்டது.

## திடக்கழிவு மேலாண்மை

### திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கூறுகள்

1) சேகரித்தல்
2) பிரித்து வைத்தல்
3) சேமித்தல்
4) கொண்டு செல்லுதல்
5) செயல்முறைகுட்படுத்துதல்
6) இறுதி அழிவு செய்தல்

### (1) சேகரித்தல் ( Collection )

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் மொத்தம் 33 வார்டுகள் உள்ளன. மொத்த மக்கள் தொகை 75,373 ஆகும். நகரில் 54 கி.மீ. நீளமுள்ள135 தெருக்கள் உள்ளன. வீடுகளின் எண்ணிக்கை 26,106 ஆகும். நகரில் தினசரி மொத்தம் 27.7 மெ.டன் திடக்கழிவு உருவாகிறது. நகரில் குப்பைகள் சேகரிக்கும் பணி கீழ்க்கண்ட முறைகளில் நடைபெற்று வருகிறது.

### 1) வீடு வீடாக சென்று குப்பை சேகரித்தல்

அனைத்து வார்டுகளிலும் உள்ள வீடுகளில் இத்திட்டப்படி குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. நகரில் தினசரி உருவாகும் 27.7 டன் குப்பைகள் இத்திட்டம் மூலம் பெறப்படுகிறது.

இந்நகராட்சியில் உள்ள ஒரு பகுதியை குப்பையில்லாத பகுதியாகவும், வேறொரு பகுதியை சுத்தமான பகுதியாகவும் மாற்ற தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நகராட்சி பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் சேர்ந்து செய்ய வேண்டிய பணிகள் பற்றிய திட்ட செயல்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### ii ) தெருக்கூட்டுதல் மூலம் குப்பை சேகரிப்பு

இந்நகரில் 54 கி.மீ. நிளமுள்ள 135 தெருக்கள் உள்ளன. வீடு வீடாக சென்று குப்பை சேகரிக்கும் துப்புரவு பணியாளரே அந்தந்த தெருக்களை கூட்டு துப்புரவு செய்கிறார். இத்திட்டம் அமல்படுத்தப்படாத தெருக்களிலும் தெருக் கூட்டுப் பணியின் மூலமாகவே அப்பகுதியிலுள்ள குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. தெருக் கூட்டுதல் மூலம் தினசரி 7.5 குப்பை சேகரிக்கப்படுகிறது. இத்திட்டம் அனைத்து வார்டுகளிலும் செயல்படுத்தப்படும் போது தெருக்கூட்டும் பணியாளர்களைகொண்டே வீடு வீடாக குப்பை சேகரிக்கும் பணியினை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>iii) வாறுகால் சுத்தம் செய்வதன் மூலம் சேகரிக்கப்படும் குப்பைகள்</u>**

இந்நகரில் 92.4 கி.மீ. நீளமுள்ள சிறிய மற்றும் பெரிய வாறுகால்கள் உள்ளன. காலங்காலமாக பொது மக்கள் குப்பைகளை வாறுகாலில் போடும் பழக்கத்தினால் வாறுகால் சுத்தம் செய்வது அவசியமாகிறது. இப்பணியில் 36 துப்புரவு பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள வாறுகால் தனியார் மூலம் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

**<u>iv ) பேருந்து நிலைய குப்பைகளை சேகரித்தல்</u>**

தற்போது பேருந்து நிலையத்தில் துப்புரவு பணிகளை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் ஷிப்ட் முறையில் 24 மணி நேரமும் துப்புரவுபணிகள் பராமரித்து வரப்படுகிறது.

**<u>( v ) குடிசை பகுதிகளில் சேரும் குப்பைகளை சேகரித்தல்</u>**

குடிசை பகுதிகளில் உருவாகும் குப்பைகளை சேகரிக்க அப்பகுதிகளில் தனியாக பெரிய இரும்பு தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளது.

**<u>( iv) பணம் பெற்றுக் கொண்டு மொத்த குப்பைகளை சேகரித்தல்</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகரமாக இருந்தாலும் பொருளாதார நிலையில் பின் தங்கிய நிலையில் உள்ளதால் தற்போது ஹோட்டல்கள் மற்றும் திருமண மண்டபங்களிலிருந்து இலவசமாகவே குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. அவர்களிடமிருந்து பணம் செலுத்துவதன் பேரில் குப்பைகளை சேகரிப்பதற்கு ஆணையாளர் மற்றும் நகர் நல அலுவலர் ஆகியோரால் கூட்டம் நடத்தப்பட்டு இத்திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்யாண மண்டப உரிமையாளர்கள் தமது பகுதியில் நடக்கும் ஒரு நிகழ்வுக்கு உருவாகும் குப்பைகளை அகற்றுவதற்கு உரிய கட்டணம் செலுத்தி சேவை முறையில் நகராட்சி பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் மூலம் திடக்கழிப்புகளை அகற்றப்பட்டு வருகிறது. உணவு விடுதி உரிமையாளர்கள் உரிய கட்டணம் செலுத்தி சேவை முறையில் நகராட்சி பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் மூலம் திடக்கழிவுகளை அகற்றப்பட்டு வருகிறது. இதற்கென சுகாதாரத் துறை மூலம் உணவு விடுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>vii ) உயிர் மருத்துவ கழிவுகளை சேகரித்தல்</u>**

இந்நகரிலுள்ள தனியார் மருத்துவமனை மருத்துவர்களுக்கு உயிர் மருத்துவ கழிவுகளை முறையே சேகரித்தல், சேமித்து வைத்தல், இறுதி அழிவு செய்தல் ஆகியவற்றிலுள்ள கூறுகள் விவரித்து நகர்நல அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் அவர்களாலும் தனித்தனியே கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. மருத்துவர்களுக்கு இது சம்மந்தமான விபரங்களைக் கொண்ட படிவங்கள் வழங்கப்பட்டு உருவாகும் உயிர் மருத்துவ கழிவுகளின் மொத்த அளவு பெறப்பட்டுள்ளது. அவர்கள் தற்சமயம் உயிர் மருத்துவ கழிவுகளை அவர்கள் சொந்த பொறுப்பில் மாவட்ட மாசு கட்டுப்பாட்டு வாரியம் நிர்ணயம் செய்த தனியார் நிறுவனம் மூலம் விதிமுறைகளின் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது கோழி இறைச்சி கடை தனியாக சேகரித்து உரக்கிடங்கில் தனியாக ஒரு இடம் தேர்வு செய்து ஆழப்புதைத்தல் முறையில் இறுதியழிவு செய்ய சம்மந்தப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

## viii) சந்தைக் குப்பைகளை சேகரித்தல்

இந்நகராட்சி பகுதியில் தனியாருக்கு சொந்தமான காய்றி சந்தை ஒன்று உள்ளது. அதன் மூலம் பொது மக்கள் அனைவரும் பயனடைவதால் தற்போது அங்கு சேரும் குப்பைகள் தனியார் நிறுவனம் மூலம் சேகரிக்கப்பட்டு வருகிறது. தினசரி சேகரிக்கப்படும் குப்பையின் அளவு 2.5 மெட்ரிக் டன் ஆகும். அவை முழுவதும் மக்கும் தன்மையுடைய குப்பைகளாக இருப்பதனால் அவை தனியே தனியார் டிராக்டர் மூலம் கலவை உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்பட்டு வருகிறது.

## ix ) வணிக நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்படும் குப்பை

இந்நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட வணிக நிறுவனங்களுக்கென்று தனியே சேகரிக்க செல்லாமல் தெருக்கூட்டும் துப்புரவு பணியாளர்கள் மூலம் அப்பணி தற்போது செய்யப்பட்டு வருகிறது.

## II. பிரித்து வைத்தல் ( Segregation )

### வீடு வீடாக குப்பைகளை பிரித்து வாஙகுதல்

தற்போது இந்நகரிலுள்ள 33 வார்டுகளுக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் வீடு வீடாக குப்பை வாஙகும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலான வீடுகளில் குப்பைகளை பிரிக்காமல் மொத்தமாகவே ஒப்படைக்கிறார்கள். அவற்றை துப்புரவு பணியாளர்களே பிரித்து எடுத்து செல்கிறார்கள்.

## III. சேமித்தல் ( Storage )

தற்சமயம் 2 டம்பர் பிளேசர் லாரி மூலம் 21 கிடஙகுகளில் 32 கன்டெய்னர் வைக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் திடக் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றது.

## IV கொண்டு செல்லுதல் ( Transportation )

இந்நகராட்சியில் தினசரி 27.7 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாகிறது. அவற்றில் 27.7 மெட்ரிக்டன் குப்பைகள் டம்பர் பிளேசர் வாகனம் மூலம் கலவை உரக்கிடஙகிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

## V. செயல்முறைக்குட்படுத்துதல் ( Processing )

### மக்கும் தன்மையுடைய குப்பைகள்

இந்நகராட்சி கலவை உரக்கிடஙகில் உரம் தயாரிக்க மற்றும் பாதுகாப்புக்குத் தேவையான (1 ) சுற்றுச் சுவர் அமைப்பு (2) அரிப்பு இயந்திரம் (3) எடை மேடை ஆகிய அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் போதுமானஅளவு தரமான உரம் தயாரிக்க இயலவில்லை.

**சிரமங்கள்**

கலவை உரக்கிடங்கில் பாதுகாப்பு சுவர் இல்லாததால் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது.

| | |
|---|---|
| அனைத்து மக்கும் குப்பைகளையும் உபயோகித்து உரிய முறையில் உரம் தயாரிக்க நிர்ணயம் செய்யப்படும் கால அளவு | 31–12– 2018 |

**மறு சுழற்சி கழிவுகள் ( Recyclable Waste )**

இருப்பு மற்றும் கழிவு பொருட்கள் துப்புரவுப் பணியாளர்கள் மூலம் எடுத்து செல்லப்பட்டு வருகிறது.

**நிலம் நிரப்புதல் ( Landfill )**

இந்நகராட்சி பகுதியில் தாழ்வான இடங்கள் இல்லை என்பதாலும், எதற்குமே பயன்படுத்த முடியாத இறுதி கழிவுகள் மிகக்குறைந்த அளவே சேருவதாலும் தற்போது கலவை உரக்கிடங்கின் ஒரு பகுதியில் இறுதிக் கழிவுகள் அதற்குரிய சிறிய அளவிலான குழியில் கொட்டப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| தற்போது தேவையான அளவு உரக்கிடங்கிற்கான இடம் உள்ளதால் எதிர்கால பயன்பாட்டிற்காக நிலம் நிரப்பும் இடம் தேர்வு செய்ய நிர்ணயம் செய்யப்பட்ட கால அளவு | 31– 12– 2020 |

**தனியார் மயமாக்குதல் ( Privatisation )**

இந்நகராட்சி பகுதியில் காலியாக உள்ள 32 துப்புரவு பணியாளர் பணியிடங்களில் 32 பணியிடங்களுக்கான பணிகள் முறைப்படி தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு 15 வார்டு களில் துப்புரவு பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி பகுதிகளில் சேரும் குப்பைகளை அவர்கள்
தம் சொந்த பொறுப்பில் டிராக்டர் மற்றும் டம்பர் பிளேசர் வாகனம் மூலம் உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு கொட்டப்பட்டு வருகிறது

## பயன் தரும் முயற்சிகள்

**பொது**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் கீழ் கண்ட இனஙகள் பயன்தரத்தக்கதாக இருந்து வருகிறது.

1. சந்தைகளும் கடைகளும்
2. பேரூந்து நிலையம்
3. ஆடடிக்கும் சாலை
4. குடியிருப்பு வீடுகள்
5. கட்டணக் கழிப்பிடம்
6. மிதி வண்டி நிலையம்
7. கேபிள் டி.வி. கட்டணம் மற்றும்
8. மரம் நடுதல் முதலியன

இந் நகராட்சிக்கு சொந்தமான கடைகள், நகரில் பல்வேறு இடஙகளில் அமைக்கப்பட்டிருக்கும் பெட்டிக்கடைகள் ஆகியவைகளின் கட்டணஙகள் மூலமும் கட்டணக் கழிப்பிடஙகள், சாலை ஒர வசூல், ஆடடிக்கும் சாலை கட்டணஙகள் மூலம், மரக்கொப்பு விற்ற வரவு மூலம், குடியிருப்பு வீடுகள் கட்டி வாடகைக்கு விடப்பட்டதன் மூலம் கிடைக்கும் வருவாயே இததலைப்பின் பிரதான வருவாயாகும்.

**போக்கு வரத்து**

போக்குவரத்து பேரூந்துகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தினராலும், மற்றும் தனியார் துறையினராலும் நடத்தப்பட்டு வருகிறது. நகருக்கு நகரைச் சுற்றியுள்ள கிராமஙகளுக்கும் முறையான பேரூந்துகள் வண்டிகள் தொடர்பு உள்ளது. பேரூந்து வண்டிக்கு உரிமையாணை வழஙகுவது தொடர்ந்து அரசினராலேயே செய்யப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 315 க்கு மேல் பேரூந்துகள் தினசரி இந்நகராட்சி பேரூந்து நிலையத்திற்குள் வந்து செல்கின்றது. இந்நகரில் புகை வண்டி நிலையம் ஒன்று உள்ளது.

**சந்தைகள், பேரூந்து நிலையம், ஆடடிக்கும் சாலை, கடைகள் முதலியன**

1. **சந்தைகள்**

இந்நகராட்சி தினசரி சந்தை பராமரிக்கப்படவில்லை. இந்நகரில் பென்னிஙடன் குழுவிற்கு செந்தமான மார்க்கெட் கடை கட்டிடஙகளும், புதுப்பள்ளிவாசலுக்குச் சொந்தமான கடைக் கட்டிடஙகளும் உள்ளன.

2. **கடைகள்**

இந்நகராட்சிக்குச் சொந்தமான கீழே கண்ட விபரப்படி கடைகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | பழைய மார்கெட் கடை | 34 |
| 2 | புது மார்க்கெட் கடை | 13 |
| 3 | பஸ் நிலைய உள் கடை | 9 |
| 4 | பஸ் நிலைய புதிய கடை | 26 |
| 5 | அரசு மருத்துவமனைக்கு எதிரில் | 4 |
| 6 | பஸ் நிலைய தஙகும் விடுதிக்கு முன்பு | 6 |
| 7 | பேரூந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் கடைகள் | 10 |
| 8 | பஸ் நிலைய உணவு விடுதி | 2 |

| | | |
|---|---|---|
| 9 | உணவு விடுதி அருகில் | 2 |
| 10 | பஸ் நிலைய வாட்டர் டேங்க் அருகில் | 2 |
| 11 | பஸ் நிலைய காலியிட கடைகள் | 4 |
| 12 | நேதாஜி ரோடு பழைய கடைகள் | 8 |
| 13 | நேதாஜி ரோடு ந.க.எண்.1645/1ல் கட்டப்பட்ட ல் நார் மேற்கோப்பு கடைகள் | 7 |
| 14 | கந்தாடைத் தெருவில் கடைகள் | 3 |
| 15 | திரு.வி.க. பள்ளி அருகில் கடைகள் | 20 |
| 16 | எம்.யு.டி.பி. நேதாஜி ரோடு கடைகள் | 28 |
| 17 | எம்.யு.டி.பி. நேதாஜி ரோடு திறந்தவெளி கடைகள் | 29 |
| 18 | ஐ.யு.டி.பி. பஸ் நிலைய மாடி கடைகள் | 15 |
| 19 | ஐ.யு.டி.பி.ஆர்.சி.சர்ச் கடைகள் | 10 |
| 20 | கிட்டங்கி | 2 |
| 21 | மட்டன் ஸ்டால்கள் | 4 |
| | அறிக்கை ஆண்டில் புதிதாக கட்டப்பட்ட கடைகள் | |
| 22 | பெருமாள் பட்டி நீர்தேக்க தொட்டி வளாக கடைகள் | 3 |

மேலே கண்ட கடைகள் பொது ஏலத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டு வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. அதன் படி 2017–18ம் ஆண்டில் கடைகள் மூலம் வாடகை மொத்த வருமானம் ரூ80,86,017/–

அரசினரின் 30.12.2000ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறையின் 147 (இருபதாண்டுகள்) மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை அரசாணை எண்.92 நாள்.03.07.2007 ன்படி இந் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கடைகளில் பொது ஏலத்தின் அடிப்படையில் முதலில் மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலம், கடை போன்றவற்றை அக் குத்தகை காலம் முடிந்த பின்னர் மறுபடியும் பழைய குத்தகைதாரர்களுக்கு மேலும் மூன்றாண்டு காலத்திற்கு அப் பகுதியின் நடைமுறையில் உள்ள வாடகை மதிப்பின் அடிப்படையிலும், சென்ற மூன்றாண்டு வாடகையை விட குறைந்தது 15 சதவிகிதம் கூடுதலாக இருக்க வேண்டுமென்ற அடிப்டையிலும் புதிய குத்தகை நிர்ணயம் செய்யப்பட்டது. 9 ஆண்டுகள் உரிம காலம் முடிவு பெற்ற கடைகளுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் தலைமையிலான குழுவின் முடிவுப்படி வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் காரணமாக அறிக்கை ஆண்டில் முந்தய ஆண்டினை விட கூடுதலாக ரூ42,91,653/- வரவு கிடைக்கப்பெற்றுள்ளது.

### 3. மிதி வண்டி நிலையங்கள்

இந் நகராட்சியில் மிதிவண்டி நிலையம் 29.10.1993 முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. சைக்கிள் 1க்கு ரூ.2.00 வீதமும், ஸ்கூட்டர் 1க்கு (நாள்.1க்கு) ரூ.5.00 வீதமும் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனை ஏலத்தில் விடப்பட்டதன் மூலம் அறிக்கையாண்டில் நகராட்சிக்கு ரூ 5,43,916/– வரவு வந்துள்ளது.

## 4. பேருந்து நிலையங்கள்

இந் நகராாடசிக்கு சொந்தமான ஒரு பேருந்து நிலையம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசினரின் 04.03.2002 ம் தேதிய உள் துறையின் எண் அரசு ஆணையின் படி பேருந்து 1க்கு ரூ.8.00 வீதம் அறிக்கையாண்டில் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந் நகராட்சி பேருந்து நிலையத்தில நல்ல வசதிகளுடன் கூடிய இரண்டு உணவு விடுதிகளும், 8 எண்ணம் தஙகும் அறைகளும், தேவையான பொருட்களை பெறுவதற்கான வசதியான பல தரப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக 95 கடைகளும் அமைக்கப்பட்டு கழிப்பறைகளும் அமைந்துள்ளது.

பேருந்துகளுக்கான தினசரி கட்டணஙகள் மூலம் அறிக்கையாண்டில் ரூ.6,07,478/– வரவு வந்துள்ளது. பேருந்து நிலையத்தில் அவ்வப்போது சேரும் குப்பைகள் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகிறது.

## 5. ஆடடிக்கும் சாலை

இந்நகராட்சியில் எல்லா வசதிகளுடன் கூடிய ஆடடிக்கும் சாலை ஒன்று கட்டப்பட்டுள்ளது. ஆடு ஒன்றுக்கு ரூ25 கட்டணம் வசூலிக்க நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. இப்பயன்பாட்டின் வசூல் உரிமத்தினை ஏலம் கோர யாரும் முன்வராததால் நகராட்சி மூலம் நடத்தப்பட்டு அறிக்கையாண்டில் ரூ.72855/– வரவு வந்துள்ளது. இந் நகரில் தனியாருக்கு சொந்தமான ஆடடிக்கும் சாலை எதுவும் இல்லை.

## 5. நகராட்சிக்குச் சொந்தமானகுடியிருக்கும் வீடுகள்

நகராட்சிக்கு சொந்தமான கீழே கண்ட குடியிருப்பு வீடுகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | தியாகராஜ நகர் காலனி | – 1 வீடு |
| 2. | மஜீத் நகர் காலனி | – 8 வீடுகள் |
| 3. | என்.பி.எஸ். நகர் | 20 வீடுகள் |

மேற்கண்ட குடியிருப்பு வீடுகளின் வாடகை மூலமாகவும், நகராட்சிக்கு சொந்தமான காலியிடஙகளை குத்தகைக்கு விடப்பட்டதன் மூலமாகவும் அறிக்கையாண்டில் ரூ. 2,87,465/– வரவு வந்தள்ளது.

## 7. கட்டணக் கழிப்பிடம்

நகராட்சி பேருந்து நிலையத்தில் நவீன கட்டணக் கழிப்பறை ஒன்றும் நேத்தாஜி சாலை வணிக வளாகத்தில் நவீன கட்டணக் கழிப்பறை பராமரிக்கப்பட்டு வருகிறது. இதை உபயோகிப்பவர்களிடம் சிறுநீர் உபயோகத்திற்கென ரூ.1.00 பைசா வீதமும், கழிவறை உபயோகத்திற்கு ரூ.2.00 வீதமும் வசூலிக்கப்படுகிறது. இப்பயன்பாட்டை குத்தகைக்கு விடப்பட்டதன் மூலம் அறிக்கையாண்டில் ரூ.12,41,196/– வரவு

வந்துள்ளது. அறிக்கையாண்டில் ரோடு ஓரஙகளில் வைத்து வியாபாரம் செய்பவரிடம் கட்டணம் வசூல் செய்வதன் மூலம் ரூ3,93,750/– வரவு வந்துள்ளது. அதே போன்று பேரூந்து நிலையத்தினுள் தலைச்சுமையாக வைத்து வியாபாரம் செய்யும் நபர்களிடம் கட்டணம் வசூல் மூலமாக அறிக்கையாண்டில் ரூ.98,343/– வரவு வந்துள்ளது.

1. **கேபிள் டி.வி கட்டணம்(Track Rent)**

கேபிள் தொலைக்காட்சி கட்டணம் வணிகவரித் துறைக்கு மாற்றப்பட்டது.

**தொழிற்சாலைகளும் தொழில்களும்**

இந்நகரில் 79 தொழிற்கூடஙகளும், 17 ரைஸ்மில்களும், 2 ஜின்னிங பஞ்சாலைகளும், 2 கைத்தறி நெசவு தொழிற்கூடமும் ஒரு பிளவர் மில்லும் உள்ளது. எல்லாத் தொழில் நிலையஙகளும், துப்புரவு ஆய்வாளர்களாலும் அடிக்கடி அப்போதைக்கப்போது ஆய்வு செய்யப்பட்டு அவ்வாறு ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்யத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**மரம் நடுதல்**

அறிக்கையாண்டில் புதியதாக மரக்கன்றுகள் எதுவும் நடப்படவில்லை. மரம் நடுவது பற்றிய விரிவான திட்டம் ஏதுவும் இல்லை. சீதோஷ்ண நிலைக்கேற்பவும் தண்ணீர் வசதியை பொருத்தும் மரஙகள் நடப்படுகிறது.

மரஙகளுக்கு வரிசை எண்கள் கொடுத்து செம்மையாக பராமரிக்கப்படுகிறது.

## <u>பொது வருவாய்</u>

**<u>வருவாய் கணக்கு வரி விகிதஙகள்</u>**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு வரிகள் விதிக்கப்பட்டு இருந்தன.

**<u>கட்டிட வரி</u>**

அறிக்கையாண்டில் வாடகை மதிப்பின் பேரில் கீழ்கண்டவாறு ஆண்டிற்கு 32 1/4 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டது.

| வரியின் வகை | அரையாண்டு வரி |
|---|---|
| 1) பொது செயலுக்காக வரி | 1 சதவிகிதம் |
| 2) தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 1 3/8 சதவிகிதம் |
| 3) மலத்துப்புரவு வரி | 1 சதவிகிதம் |
| 4) விளக்குவரி | 2 சதவிகிதம் |
| 5) கல்விவரி | 2 சதவிகிதம் |
| மொத்தம் | 16 1/8 சதவிகிதம் |

## ஆ ) பொது நிதி கணக்கு

2017 –18ம் வருடத்திய வரவினங்களில் முக்கிய இனஙகளில் விவரம் வருமாறு
(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| அ ) சொத்துவரி விதிப்பு | ரூ. 177.45 |
| ஆ ) இதர வரியினஙகள் | ரூ. 34.50 |
| இ ) அரசு மூலம் வருவாய் | ரூ. 957.74 |
| ஈ ) பற்றாக்குறை மானியம் | ரூ. --- |
| உ ) கட்டணஙகள் மூலம் | ரூ. 99.06 |
| ஊ ) மான்யம் மற்றும் உதவித்தொகை | ரூ. 0.00 |
| எ ) விற்பனை மற்றும் வாடகை | ரூ. 109.31 |
| ஏ ) இதர வருவாய் | ரூ. 18.30 |
| ஐ ) முந்தைய வருட வருவாய் | ரூ. -- |
| மொத்த வருமானம் | ரூ. 1396.36 |

## செலவினஙகளின் விவரம்

| | |
|---|---|
| அ ) ஊதியம் வகைக்கு | ரூ. 660.66 |
| ஆ ) அலுவலர்கள் இதர தனிப்பட்ட செலவினம் | ரூ. 24.62 |
| இ ) ஓய்வூதியப்பயன்கள் | ரூ. 283.91 |
| ஈ ) நடைமுறை செலவுகள் | ரூ. 77.41 |
| உ ) பழுது நீக்கம் | ரூ. 184.07 |
| ஊ ) திருவிழா செலவு | ரூ. 1.97 |
| எ ) நிர்வாக செலவு | ரூ. 17.73 |
| ஏ ) நிதிச்செலவு | ரூ. 0.06 |
| ஐ ) சொத்துக்கள் மீதான வருடாந்திர செலவு | ரூ. 63.85 |
| ஒ ) முந்தைய வருடத்திய செலவு | ரூ. --- |
| மொத்த செலவினம் | ரூ. 1314.28 இலட்சம் |

## ஆ ) கல்விநிதி கணக்கு

2016 –2017ம் வருடத்தில் கல்விநிதிக் கணக்கின் மீதான வரவுகள் மற்றும் செலவு விபரஙகள் பின்வருமாறு

| வரவினம் | |
|---|---|
| அ ) சொத்துவரியின் மீதான கல்விநிதி வரவு | ரூ. 36.04 இலட்சம் |
| ஆ ) இதர வருமானம் | ரூ. 2.07 |
| இ ) முந்தைய வருட வருமானம் | ரூ. --- |
| மொத்தம் | ரூ. 38.11 இலட்சம் |

| செலவினம் | |
|---|---|
| அ ) ஓய்வூதியப் பயன்கள் | ரூ. --- |
| ஆ ) நடைமுறை செலவு | ரூ. 3.58 |
| இ ) நிர்வாக செலவு | ரூ. 0.02 |
| ஈ ) சொத்துக்களின் மீதான வருடாந்திர செலவு | ரூ. 19.88 |
| மொத்தம் | ரூ. 23.48 |

## இ ) குடிநீர் கணக்கு

2016 –2017ம் வருடத்தில் குடிநீர் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு மற்றும் செலவு விபரம் பின்வருமாறு

| வரவினம் | |
|---|---|
| அ ) சொத்துவரியின் மீதான குடிநீர் வடிகால் வரி | ரூ. 19.67 |
| ஆ ) சேவைக் கட்டணம் | ரூ. 90.59 |
| இ ) உதவி தொகை | ரூ. 17.26 |
| ஈ ) இதர வருவாய் | ரூ. 11.33 |
| உ ) முந்தைய ஆண்டு வரவு | ரூ. --- |
| மொத்தம் | ரூ. 138.85 |

| செலவினம் | |
|---|---|
| அ ) ஊதியம் வகைக்கு | ரூ. 52.40 |
| ஆ ) ஓய்வூதியப்பயன்கள் | ரூ. 0.00 |
| இ ) நடைமுறை செலவு | ரூ. 34.98 |
| ஈ ) பழுது நீக்கச் செலவு | ரூ. 83.29 |
| உ ) திட்டச்செலவு | ரூ. -- |
| ஊ ) நிர்வாக செலவு | ரூ. 4.55 |
| எ ) நிதிச்செலவு | ரூ. 0.13 |
| ஏ ) சொத்துக்கள் மீதான கழிவு | ரூ. 126.63 |
| ஐ ) முந்தைய வருடத்திய செலவு | ரூ. |
| மொத்தம் | ரூ. 301.98 |

நகராட்சியின் ஒட்டு மொத்த வரவு செலவினம் விபரம் பின்வருமாறு

ரூ. லட்சத்தில்

| | வரவு | செலவு | ஊதியத்திற்கான செலவு சதவிகிதம் |
|---|---|---|---|
| பொது நிதி | 1396.36 | 1314..28 | 69% |
| கல்வி கணக்கு | 38.11 | 23.48 | --- |
| குடிநீர் கணக்கு | 138.85 | 175.35 | 38% |
| **மொத்தம்** | **1573.32** | **1513.11** | 65% |

இந்நகராட்சியில் வரிகள் உரிமையாணைக் கட்டணங்கள் அரசினரின் மான்யங்கள் உதவித் தொகைகள் வருவாய் தரும் சாதனங்களின் மூலம் வரவுகள், அரசினர் கடன்கள் கேளிக்கை வரி முதலியவைகளே முக்கிய வருமானம் ஆகும். வசூலிக்கப்பட்ட தொகைக்கு இயல்பான செலவுகளும் முதலீடு செலவுகளுக்கும் பயன் படுத்தப்பட்டன.

<u>இயல்பான வருவாய் துறைகள்</u>

அறிக்கையாண்டில் 2017–18 ல் மொத்த சாதாரண செலவு ரூ. 1513.11 லட்சம் சாதாரண வருவாய் ரூ. 1573.32 லட்சம்.

வரப்பெற்ற முக்கிய வருவாய் இனஙகளின் விவரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1 ) பத்திர விற்பனை மீது விதிக்கப்படும் வரியின் உபரி கட்டணம் | ரூ 20.97 லட்சம் |
| 2 ) கேளிக்கை வரியின் மூலம் வரவு | ரூ. –– |
| 3 ) மோட்டார் வாகனவரி, சுஙகவரி | ரூ. –– |
| 4 ) நீதிமன்ற அபராத கட்டணம் | ரூ. –– |
| 5 ) விற்பனைவரி மீதான கூடுதல் வரி | ரூ. –– |
| 6 ) மாநில நிதி ஆணையக்குழு பரிந்துரையின்படி மான்யம் | ரூ. 775.37 லட்சம் |
| 7) 13 வது மத்திய நிதி ஆணையக்குழு மான்யம் | ரூ. 161.29 லட்சம் |
| | ––––––– |
| | ரூ957.63 லட்சம் |
| | –––––– |

நகராட்சியில் வழக்கத்திற்கு மாறாக அதிகப்படியான எதிர்பாராத செலவுகள் ஏதுவுமில்லை.

<u>மூலதனம்</u>

அறிக்கையாண்டில் எல்லா கணக்கு தலைப்புகளிலும் மூலதன பணிகள் செலவு செய்யப்பட்டன. கடன் தொகையில் இருந்து செலவிடப்பட்டது எதுவுமில்லை.

<u>கடன்கள்</u>

2017–2018 ம் ஆண்டு ஆரம்பத்தில் கடன் வரவு செலுத்திய தொகை விபரம் வருமாறு

ரூ. லட்சத்தில்

| வ.எண். | விபரம் | பொது நிதி | |
|---|---|---|---|
| | | அசல் | வட்டி |
| 1 | அரசினருக்கு செலுத்தப்பட வேண்டிய இருந்த கடன் தொகை | 95.31 | ––– |
| 2 | அறிக்கையாண்டில் வரவு | –– | ––– |
| 3 | தவணை கடந்த வட்டி அசல் | –– | ––– |
| 4 | மொத்தம் கடன் தொகை | 95.31 | ––– |
| 5 | அறிக்கையாண்டில் அரசுக்கு செலுத்தப் பட்டது | 29.12 | ––– |
| 6 | அறிக்கையாண்டில் முடிவில் கடன் தொகை நிலுவை | 66.19 | ––– |

தவணைகள் உரிய காலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

**<u>தணிக்கை</u>**

அறிக்கையாண்டின் ஆரம்பத்தில் 413 தணிக்கை தடைகள் இருந்தது. அறிக்கையாண்டில் 89 தடைகள் எழுப்பப்பட்டது. 2017–18 ல் 242 தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டது. மீத. 260 தணிக்கைத் தடைகள் நிலுவையாக இருந்தது. நிலுவையிலுள்ள தணிக்கை தடை நீக்கம் செய்யத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசினரிடமிருந்து பெற்ற நிதி உதவித் தொகைகள் கொண்டு தூசிபடியாத தார்தளம் சாலைகளாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சியிலிருந்து மருத்துவமனைகள் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

அரசினர் மருத்துவமனையில் நகர மக்களுக்கு சிறப்பான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பொது நிதிக்கணக்கு மிகுந்த பற்றாக்குறை ஆகவே இருந்து வருகிறது. பற்றாக்குறையை ஈடு செய்ய வருமானத்தைப் பெருக்கும் வகையில் வரியினங்கள் மற்றும் வரியில்லாத இனங்கள் கூடுதல் செயல் திட்டங்கள் நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாகம் செம்மையாக நடைபெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களும் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களும் நகர்மன்றத் தலைவர் அவர்களும் அவ்வப்போது தக்க அறிவுரைகள் வழங்கி வருகிறார்கள்.

பொதுவில் 2017–2018 ம் ஆண்டு நகராட்சியின் செயல்கள் சிறப்பானதாக அமைந்தது.

## <u>நகரமைப்பு பிரிவு</u>

இந்நகராட்சிக்கு ( நிலை 2 ) நகரமைப்பு அலுவலர் பதவி ஒன்று நிரந்தரமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. திரு.பி.மதியழகன், நகரமைப்பு அலுவலராகவும் மற்றும் திருமதி. ப. சுந்தரவள்ளி நகரமைப்பு ஆய்வாளராகவும் அறிக்கை ஆண்டு முழுவதும் பணியாற்றி வருகிறார்கள். மேலும் இளநிலை உதவியாளர் ஒருவரும், அலுவலக உதவியாளர் ஒருவரும் பணியாற்றி வருகின்றார்கள்.

**<u>உள்ளூர் திட்டக் குழுமம் ( Local Planning Authority )</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் தனித்த உள்ளூர் திட்டக்குழு ( Single Local Planning Authority ) என்பதால் அரசாணை எண். 650 ஆர்.டி. எல்.ஏ. துறை, நாள் 08–04–1975ன்படி ஆணையர் முறையே உள்ளூர் திட்டக்குழுத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் செயல்பாட்டு அதிகாரி என உள்ளனர். தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971, பிரிவு 91 ஏ ன்படி அதிகாரஙகளை ஒரு குழுவிற்கோ அல்லது செயல்பாட்டு அதிகாரிக்கோ வழஙகலாம். எனவே முழுமைத்திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டஙகளில் அனைத்துக் கட்டிடஙகள் கட்டிக் கொள்ள அனுமதி கோரி வரப்படும் கட்டிட விண்ணப்பஙகளுக்கு அனுமதி வழஙகவும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 91 ன் படி வழஙகப்பட்டு வருகிறது. மேலும் அறிக்கை ஆண்டில் ஆணையாளர் அவர்கள் தனி அலுவலர் பொறுப்பில் உள்ளதால் ஆணையாளல் அவர்களால் கட்டிடம் கட்ட அனுமதியும், திட்ட அனுமதியும் வழஙகப்பட்டு வருகிறது.

## முழுமைத்திட்டம்(Master Plan)

அரசாணை எண். 139, நாள் 07–02–1990 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்படி இந்நகராட்சிப் பகுதிக்கு முழுமைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.

மேற்படி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட முழுமைத் திட்டம் நடைமுறைக்கு வந்து 5 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 32 ( 2 )ன்படி மறு பரிசீலனை செய்து தயாரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்திற்கு அரசாணை எண். 102, நாள் 03–03–2000ன் படி வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்படி இணக்கம் அளித்து அரசு உத்திரவிடப்பட்டுள்ளது.

அரசால்இணக்கம் அளிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தின் மீது பொது மக்கள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டு, செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டும், தமிழ்நாடு அரசிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யப்பட்டும் தொடர் நடவடிக்கைகள் முழுமைத்திட்டம் தயாரித்தல் மற்றும் அங்கீகரித்தல் மற்றும் விளம்பரப்படுத்துதல் விதிகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 08–10–2001ம் தேதிய உள்ளூர் திட்டக்குழுவின் தீர்மானம் எண். 341ல் பரிந்துரை செய்யப்பட்ட 05–11–2011ம் தேதி நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையருக்கு அனுப்பப்பட்டு இறுதி ஒப்புதல் பெறநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## நகரமைப்பு திட்டஙகள் ( T.P. SCHEMES)மற்றும் விரிவு அபிவிருத்தி திட்டஙகள்(DD.PLAN)

### 1) இரயில்வே ஸ்டேஷன் ஏரியா நகரமைப்பு திட்டம் ( Railway Station Area T.P. Scheme )

இதன் மொத்தப்பரப்பளவு 36.12 ஹெக்டேர். அரசு தனது பொது சுகாதாரத்துறை நாள் 24–06–1930 ஆணை எண். 1564ல் அஙகீகாரம் அளித்துள்ளது.

இந்த நகரமைப்பு திட்டம் தயாரிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டபடியால், திட்ட உத்தேசத்திற்கு மாறாக வளர்ச்சியின் அடிப்படையில் திட்டப் பகுதி அளவை செய்யப்பட்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 33 ( 1)ன்படி மறு ஆய்வு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கையின் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2 ) பெருமாள்பட்டி விஸ்தரிப்பு நகரமைப்பு திட்டம் ( Perumalpatti Extension T.P. Scheme )

இதன் மொத்த பரப்பளவு 2.23 ஹெக்டேர்.

அரசு தமது 23–06–1960ம் தேதிய அரசு ஆணை எண். 1049 RD & LA துறையில் அஙகீகாரம் அளித்துள்ளது.

இந்த நகரமைப்பு திட்டம் தயாரிக்கப்பட்ட பல ஆண்டுகள் ஆகிவிட்டபடியால், திட்ட உத்தேசத்திற்கு மாறாக இடத்தில் வளர்ச்சியடைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு மறு ஆய்வு செய்து நகர்ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3 ) <u>தைக்காப்பட்டி விஸ்தரிப்பு நகரமைப்பு திட்டம்</u> <u>( Thaikapatti Extension T.P. Scheme</u> )**

இதன் மொத்த பரப்பளவு 3.07 ஹெறக்டேர்.

அரசு தமது 15–12–1969ல் ஆணை எண். 2459 RD & LA துறையில் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நகரமைப்பு திட்டம் தயாரிக்கப்பட்ட பல ஆண்டுகள் ஆகிவிட்டபடியால், திட்ட உத்தேசத்திற்கு மாறாக இடத்தில் வளர்ச்சியடைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு மறு ஆய்வு செய்து நகர்ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4 ) <u>கூனங்குளம் விஸ்தரிப்பு நகரமைப்பு திட்டம் ( Kunankulam Extension T.P. Scheme )</u>**

இதன் மொத்த பரப்பளவு 3.31 ஹெறக்டேர் ஆகும்.

அரசு தமது 07–07–1972ம் தேதிய அரசு ஆணை எண். 1907 RD & LA துறையில் அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்த நகரமைப்பு திட்டம் தயாரிக்கப்பட்ட பல ஆண்டுகள் ஆகிவிட்டபடியால், திட்ட உத்தேசத்திற்கு மாறாக இடத்தில் வளர்ச்சியடைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 33 ( 1 )ன்படி மறு ஆய்வு செய்யப்பட்டு, நகர்ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்கள் 31–03–2000ம் தேதிய ந.க.எண். 43485/98/டிபி 2 எண் செயலாணைக் கடிதத்தில் இணக்கம் அளிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இறுதி ஒப்புதல் பெற துணை நகர் ஊரமைப்பு இயக்குநர், மதுரை மண்டலம் வழியாக ( ந.க.எண். 628/2004/மம 3 நாள் 11–03–2008. ) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ( நகராட்சி கோப்புஎண். 23687/2008/எப்1 நாள் 16–04–2008 ).

**<u>5 ) விரிவு திட்டம் அபிவிருத்தி திட்டம் எண். 1 ( D.D.plan No 1 )</u>**

இதன் மொத்த பரப்பளவு 45.35 ஹெறக்டேர்.

நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் 28–06–1994ம் தேதிய ந.க.14468/94/டிபி2 எண் செயலாணை கடிதத்தில் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

திட்ட வரைபடத்தின்படி கட்டிட மற்றும் திட்ட அனுமதி வழஙகப்பட்டு அனுமதியற்ற கட்டுமானஙகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

<u>கட்டிடவிண்ணப்பஙகள்</u>

2017–18ம் ஆண்டுக்கு 162 கட்டிடவிண்ணப்பஙகள் வரப்பெற்றுள்ளது. அவற்றில் 119 க்கு கட்டிடஅனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேலும் கட்டிடஅனுமதி கட்டணமாக ரூ 767123/– கட்டிட அபிவிருத்தி கட்டணமாக ரூ79,914/– வசூல் செய்யப்பட்டுள்ளது.

**<u>அ ) நிரந்தர ஆக்கிரமிப்புகள்</u>**

வாறுகால், படிகள், வெயில் மறைவுத் தட்டிகள் முதலியவைகளை அளவு நடப்புகளுக்கு விதிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகளுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் அனுமதியுடன் உரிமையாணைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>ஆ ) தற்காலிக ஆக்கிரமிப்புகள்</u>**

தற்காலிக ஆக்கிரமிப்புக்களை வருவாய் துறை, காவல்துறை, நெடுஞ் சாலைதுறை மற்றும் நகராட்சி ஆகிய துறைகள் ஒன்று சேர்ந்து நகரில் ஆடித் திருவிழாக்கள் மற்றும் இதர நாட்களில் நகரில் உள்ள ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்பட்டது.

ஆணையாளர்
ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி